
Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2014

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom





## செயல்முறைப் பாடங்களுக்கான முன்னுரை

யாக்கோபு • 1 பேதுரு • 2 பேதுரு • 1 யோவான் • 2 யோவான்

3 யோவான் • யூதா

பொதுவான நிருபங்களிலுள்ள செயல்முறைப்பாடங்கள்

# ஆதியிலே



"அதன்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்," என்ற தலைப்பின் வார்த்தைகளின்படி செய்கிறவர்கள் என்பதற்கு, நம்முடைய குணலட்சணங்கள் மறுரூபமாக்கப்படும் என்ற பொருளை யாக்கோபு கூறுகிறார். இந்த உலகத்திலிருந்து கிறிஸ்தவர்கள், இப்பொழுதே, இங்கு மாறுவதற்கு வெளியே அழைக்கப்படுகிறார்கள்.

நாம் அனைவரும் அந்நிய தேசத்தில் பரதேசிகள் என்பதை, "பரதேசிக்கு பாத்திரமான வாழ்க்கை" (1 பேதுரு) என்ற தலைப்பில் பேதுரு நம்மை சிந்திக்க அழைக்கிறார், ஆகவே, இயேசுவை போல, நாமும்கூட மாம்ச இச்சைகளுக்கு விலகி, மனுஷனுடைய ஒவ்வொரு விதிகளுக்கும் அர்ப்பணித்து சோதனைகளை ஏற்றுக்கொண்டு சகிக்க வேண்டும்.

"விசுவாசம் மற்றும் யுகத்தின் முடிவு" (2 பேதுரு) என்ற தலைப்பு விசுவாசமே அஸ்திபாரம் என்று கூறுகிறது, நம்முடைய குணலட்சணங்களை அதின் மேல் கட்டவேண்டும். மாம்சத்தின் இச்சை விஷமுள்ளது. நாம் கட்டக்கூடிய குணலட்சணங்களே நம்மை உயிர்த்தெழுதலுக்குள் அழைத்துச் செல்லும்.

நாம் வெளிச்சத்தைக் கண்டிருந்தோமேயானால், நாம் அந்த வெளிச்சத்தைக்குறித்துப் பேசி, அதற்குரிய வாழ்க்கையை வாழ வேண்டும் என்று, "1 யோவானிலிருந்து சில செயல்முறை பாடங்கள்" என்ற தலைப்பு நமக்கு கூறுகிறது. நம்முடைய இருதயங்களில் ஆண்டவருக்கு மேலாக காணப்படும் எவ்வளவு காரியங்களானாலும் வெறுக்கத்தக்க விக்கிரகமாயிருக்கிறது.

"எச்சரிப்பும், ஊக்கமளிக்க கூடிய ஒரு நிருபம்" (2 யோவான்) என்ற தலைப்பு, இக்காலத்தில் நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வில் நம்முடைய சகோதரரோடு கூட ஐக்கியப்பட்டு ஜீவிப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கிறது. அப்பொழுது, வருங்காலத்தில் நம்முடைய மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவோடு நித்தியமான ஐக்கியத்தில் வாழலாம்.

"கடினமான ஒரு சகோதரனோடு தோழமைத் தொடர்பு" - தியோத்திரேப்பு (3 யோவான்) என்ற தலைப்பு, அப்போஸ்தலர்களைக் காட்டிலும் தங்களை மேலாக எண்ணிக்கொள்ளும் மூப்பர்களிடம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று கூறுகிறது.

"விசுவாசிகள் செய்யக்கூடியவைகளையும், செய்யக் கூடாதவைகளையும்" யூதா குறிப்பிடுகிறது. பெருமையும், இச்சையும் அநேகரை விழச்செய்வதற்குக் காரணமாய் உள்ளது. நாம் இரக்கத்தைப் பெறும்படி, மற்றவர்களிடம் இரக்கமாய் நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**ஜனவரி / பெப்ரவரி 2014**


**செயல்முறைப் பாடங்களுக்கான முன்னுரை** 35

கிறிஸ்தவ வாழ்க்கைக்குரிய பாடங்கள்

**அதன்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்** 36

யாக்கோபு : இப்படி செய்பவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள்

**பரதேசிக்குப் பாத்திரமான வாழ்க்கை** 42

1 பேதுரு : இச்சையடக்கம், பெருமையை அவித்து கிறிஸ்துவை பின்பற்றுதல்

**விசுவாசம் மற்றும் யுகத்தின் முடிவு** 46

2 பேதுரு : மாம்சமும் ஆவியும், விசேஷமாக 21-ம் நூற்றாண்டில்

**1 யோவானிலிருந்து சில செயல்முறை பாடங்கள்** 51

1 யோவான் : நான்கு பகுதிகளில் உள்ள பதினோரு பாடங்கள்

**எச்சரிப்பும், ஊக்கமளிக்கக்கூடிய ஒரு நிருபம்** 57

2 யோவான் : மணவாளனுடன் ஐக்கியப்படுவதற்கு முன் சகோதரர்களோடு ஐக்கியம்

**தியோத்திரேப்பு என்னும் கடினமான ஒரு சகோதரன்** 60

3 யோவான் : பேராசையுள்ள ஒரு மூப்பர், தனிப்பட்ட பொறுப்புகள்


**விசுவாசிகள் செய்யக்கூடியவைகள் மற்றும் செய்யக்கூடாதவைகள்** 62

யூதாவின் நிருபம் : பேராசையுள்ள ஒரு மூப்பர்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 67

யாக்கோபு

# அதன்படி செய்கிறவர்கள் பாக்கியவன்கள்



"தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது:" (யாக். 1:1)

"யாக்கோபு" என்று அழைக்கப்படும் இரண்டு அப்போஸ்தலர்கள் உள்ளனர்; செபதேயுவின் குமாரனும், யோவானின் சகோதரனுமாகிய யாக்கோபு மற்றும் அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு. மேலும், ஆண்டவரின் சகோதரனாகிய ஒரு யாக்கோபும் இருந்தார். (ஆசிரியரிர் குறிப்பு: ஆண்டவரின் சகோதரனாகிய யாக்கோபை, எருசலேமின் ஆலயத்திலுள்ள கூட்டத்தலைவனாக மற்றவர்கள் கருதுகிறார்கள். அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபை, சிறிய யாக்கோபு என்றும் அழைக்கிறார்கள். மத். 13:55-ல் குறிப்பிடப்படும் சகோதரர்கள் மட்டுமே (யாக்கோபு மற்றும் யூதா) அவர் மேல் விசுவாசம் வைத்த அப்போஸ்தலர்கள்). இறுதியாக சொல்லப்பட்டவரே யாக்கோபின் நிருபத்தை எழுதினார் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் பவுல்: "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்" (1 கொரி. 15:3-8) என்று குறிப்பிடுகிறார்.

மேலும், பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்திலும்கூட: "மூன்று வருஷம் சென்றபின்பு, பேதுருவை கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்துநாள் தங்கியிருந்தேன். கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபை தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை" (கலா. 1:18-19) என்றும் குறிப்பிடுகிறார்.

அவர் பண்ணிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக இராவிட்டாலும், கிபி 48-ம் வருஷத்திற்குள் (முன்னதாகவே சிலர் குறிப்பிடுகின்றார்கள்) யாக்கோபு எருசலேமிலுள்ள சபையின் ஒரு முக்கிய மூப்பராகவும் சபைக்கு தூணாகவும் இருந்தார் என்று கூறப்படுகிறது. முதல் சபையில் நடந்தபோது, இவைகளைக்குறித்து ஆலோசனை செய்வதற்குக் கூட்டப்பட்ட முதல் கூடுகை யாக்கோபின் தலைமையில் நடைபெற்றது. புறஜாதிகளுக்கு விசுவாசத்தை எடுத்துச்சென்ற பேதுருவின் கருத்துப் பரிமாற்றங்களையும், அதற்குப் பின் பவுல் மற்றும் பர்னபா புறஜாதிகளுக்கு மத்தியில் செய்த ஊழியங்களின் அனுபவங்களைக் கூறுகையில் யாக்கோபு இவைகளை கவனமாகக் கேட்டு அதின் ஆழங்களைத் தெளிவாகப் புரிந்து, தெய்வீக திட்டத்தின் விவரங்களை மிக அருமையாக வெளிப்படுத்தினார் (அப். 15:13-21).

தான் ஓர் உயர்ந்த நிலையில் இருப்பதை வெளிப்படுத்தாமல், மிக எளிமையான நடையில் யாக்கோபு தன்னுடைய நிரூபத்தை துவங்குகிறார். தன்னை ஓர் ஊழியக்காரனாக மட்டுமே அறிமுகப் படுத்துகிறார். எருசலேமிலுள்ள யூதர்களுக்கு மட்டுமல்ல, இஸ்ரயேல் தேசத்தாருக்குமட்டுமல்ல, புற தேசங்களில் சிதறியிருக்கும் பண்ணிரண்டு கோத்திரங்களிலும் உள்ள யூத விசுவாசிகளுக்கே யாக்கோபு தம்முடைய நிரூபத்தை எழுதினார். பத்து கோத்திரங்களை, கிமு 721-ல் அசீரியர்கள் சிறைப்பிடித்துச் சென்றனர். மேலும், இராஜ்யத்தின் இரண்டு கோத்திரங்களை கிமு 586-ல் பாபிலோனியர்கள் சிறைபிடித்துச் சென்றனர்.

ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோ. 8:28).

"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (1 பேது. 4:12-13). முடிவு காலத்திலுள்ள பல தேவனுடைய ஜனங்கள், அன்று அப்போஸ்தலர்கள் அனுபவித்ததுப்போல, பல உபத்திரவங்களை, பல நிலைகளில் அனுபவிப்பார்கள் - வியாதிகள், வேதனைகள், ஏமாற்றங்கள், இருதய நோய்கள். கொடூரமான எந்த உபத்திரவமும் தனக்குள் மகிழ்ச்சியாயிராது. இதில் அகப்படும் ஒருவர் அதிலிருந்து விடுபட நாடலாம் - "சந்தோஷ மாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் கூறுகிறேன்" என அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு ஆலோசனையாகக் கூறுகிறார் (பிலி. 4:4). "கர்த்தருக்குள்" மகிழ்ச்சியாயிருக்கக்கூடிய காரியம், இருதயத்திலிருந்து தேவனிடத்தில் தொடர்பு வைத்திருக்கும் காரியத்தைக் குறிக்கும். மேலும், பல உபத்திரவங்கள் மத்தியிலும் தங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தமே செய்ய வேண்டும் என்று விரும்புவார்கள். இதுவே, அந்தரங்கத்தில் காணப்படும் சந்தோஷத்தின் ஆவி. இது சரியாக புரிந்துகொள்ளப்பட்டால் - நீடிய பொறுமை, ஞானம், சாந்தம், சகோதர சிநேகம் மற்றும் அன்பு - போன்ற விரும்பத்தக்க கனிகளை பிறப்பிக்கும். விலையேறப்பெற்ற நம்முடைய ஆண்டவருக்குள் சந்தோஷமாய் இருப்பதற்கான நம்முடைய சிறந்த எடுத்துக்காட்டு: "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி. 12:2).

**நிலையற்ற இருமனம் உள்ளவர்கள்**

விசுவாசத்தோடு ஒருவர் பரத்திலிருந்து ஞானத்தை வேண்டினால், அவருக்கு நிச்சயமாகக் கொடுக்கப்படும் என்று பேதுரு ஆலோசனைக் கூறுகிறார். ஒருவேளை இருமனம் உள்ளவர்கள் அல்லது தேவனிடத்தில் விண்ணப்பிப்பதற்கு தயக்கம் உள்ளவர்களை, "இருமனமுள்ளவன் தன் வழிகளி லெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்" (யாக். 1:8) என்று யாக்கோபு அறிவிக்கிறார். இப்படிப்பட்டவர்கள், தங்களுடைய விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளுவோம் என்று எதிர்பார்க்க வாய்ப்பில்லை. ஒருவர் நிலையான விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. "சந்தேகப் படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்" (யாக். 1:6).

"நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவா களாயிராமல்" (எபே. 4:14) என்று எபேசியருக்கு எழுதின நிருபத்தில் பவுல் குறிப்பிடுகின்றார். தேவன் ஆபிரகாமின் ஒரே பேறான குமாரனை பலி செலுத்த அழைத்தபோது, ஆபிரகாமிடம் இருந்த விசுவாசத்தைக்குறித்து யாக்கோபு சகோதரர்களுக்கு நினைப்பூட்டுகிறார், நம்முடைய தேவன் மேல் கொண்டுள்ள பூரணமான விசுவாசத்திற்கு இதைக்காட்டிலும் சிறந்த எடுத்துக்காட்டு ஒன்றுமில்லை. ஏனெனில், ஈசாக்கு பலி செலுத்தப்பட்டாலும், தேவன் வாக்களித்தபடி ஈசாக்கை தமக்கு முன் நிறுத்துவார் என்று ஆபிரகாம் சந்தேகத்திற்கு இடமின்றி விசுவாசித்தார்.

ஒரு காரியத்தைக்குறித்து நாம் திருப்தியடையும் அளவுக்கு நிரூபிக்கப்பட்டால், நம்முடைய சிந்தையை குழப்பம் என்னும் காற்றுகள் பாதிக்காதபடிக்கு என்றும் அமைதியாக இருக்க வேண்டும். அப்பொழுது நாம் தேவனுடைய ஆழமான காரியங்களைப் புரிந்துகொள்வதில் முன்னேற்றம் அடையலாம். இந்த பாதையில் சீராக நடந்தால் கிறிஸ்துவின் குணலட்சணங்களில் வளர்ச்சி யடையலாம். "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக" (1 பேது. 5:10).

நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது."

தேவனிடத்திலிருந்து வரும் ஞானமோ, சுத்தமானதாகவும், தூய்மையானதுமாயிருக்கிறது. நம்முடைய இருதயங்களும் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாயிருந்தால், அந்த பரிசுத்தமான ஞானத்தோடு இசைந்து இயேசு கிறிஸ்துவின் வழியாக தேவனுடைய சமாதானத்தைப் பெற்றிருப்போம். சுத்தமான இருதயத்திலிருந்து ஆவிக்குரிய கனிகள் எவ்வாறு வெளிப்படுத்தப் படுகிறது என்பதை, யாக்கோபு தெளிவாகக் காட்டுகிறார் - இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. மேலும், இப்படிப்பட்ட குணலட்சணங்கள் மாயமற்றதாயும், பட்சபாதமில்லாததாயும் இருக்கிறது.


குறிப்பாக, இந்த மாய்மாலமான குணத்தைக்குறித்து, இயேசு, பரிசேயர்களைக் கடிந்து கொண்டார். "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப் பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" (மத். 23:27-28). மேலும், அவர் தங்களை பரிசுத்த வான்களாக வெளிப்புறமாக வேஷம் போட்டுக் கொண்டிருந்த மதத்தலைவர்களையும் எச்சரித்தார். இக்குணத்தை உடையவர்கள் இரண்டாம் மரணத்திற்கு மிக எளிதாக வழி நடத்தப்படுவார்கள். ஆகவே, இருதயத்தில் காணப்படும் தூய்மை மிக அவசியமானது. ஆகவே, "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" (மத். 5:8) என்று இயேசு மலை பிரசங்கத்தில் கூறினார்.

யாக்கோபு எழுதின கடைசி பாடத்தை ஐந்தாம் அதிகாரத்தில் காணலாம். "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக் கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக். 5:13-16).

நாம் உபத்திரவப்படுபவர்களுக்காக ஜெபிப்பதில்லையா? ஆம், ஜெபிக்கின்றோம். ஆனாலும், அவர் தமது சூழ்நிலையிலிருந்து வெளியே வருவதற்கு கட்டளைக் கொடுப்பதில்லை. மாறாக, அந்த சூழ்நிலையையும் நன்மைக்கு ஏதுவாக நடத்தும்படி வேண்டிக்கொள்கிறோம். "சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்" (மத். 26:39) என்று இயேசு தேவனிடம் வேண்டினார். "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்"(1 பேது. 5:7) என்று அப்போஸ்தலனாகிய பேதுருவும் நமக்கு ஆலோசனைக் கூறுகிறார்.

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்ட வியாதி ஆவிக்குரியதாக இருந்தாலும் சரி, சில நேரங்களில் மாம்சத்திற்குரியதாக இருந்தாலும் சரி, நம்முடைய அன்றாட காரியங்களில் நமக்கு எதிரிடையான

# பரதேசிக்குப் பாத்திரமான ஒரு வாழ்க்கை



"இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில்" (1 பேது. 1:1).

Brian Montague

முதலில் துவங்கும் வசனமானது, பேதுருவினால் எழுதப்பட்டது என்று கூறுகிறது. தேவனுடைய ஜனங்கள் நீதியாக வாழ்ந்து, பல எதிரிடையான சூழ்நிலைகளில் நீடியபொறுமையை வெளிப்படுத்தி தேவனிடத்திலிருந்து கிடைத்த கிருபைக்கு நல்ல உக்கிராணக்காரர்களாக இருக்க வேண்டும் என்பதே பேதுரு இந்த நிருபத்தில் அடிப்படையான ஆலோசனைகளைக் கூறுகிறார். பல சோதனைகளை அனுபவிக்கும் புற ஜாதிகளின் மத்தியில் சிதறியிருக்கும் யூத கிறிஸ்தவர்களுக்கு, பேதுரு ஊக்கமளிக்கக்கூடிய இவ்வார்த்தைகளை எழுதுகிறார். இவ்வார்த்தைகள் யூதர்களுக்கு மட்டுமல்ல, தேவனோடுகூட உடன்படிக்கையில் பிரவேசிக்கும் ஒவ்வொருவருக்கும் முடிவுபரியந்தம் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இவ்வார்த்தைகளை எழுதினார். இவர்களின் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான காரியங்களையும் தங்களுடைய இரட்சிப்புக்கேற்ற நம்பிக்கைகளையும் முக்கியத்துவப்படுத்தியிருக்கிறார்.

ஆதி சபையில் இவர் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றவர் என்று அவர் எழுதின நிருபங்கள் கூறுகிறது. மேலும், எல்லா சுவிசேஷங்களிலும் மற்ற சீஷர்களைக்காட்டிலும் இவரைக்குறித்து அதிகமாக எழுதப்பட்டுள்ளது. பூர்வீகமாக சீமோன் என்று அழைக்கப்பட்ட அப்போஸ்தலனாகிய பேதுரு, யோனாவின் குமாரனும், மீன் பிடிக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவருமாயிருந்தார். நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய ஊழியத்தின்போது, கிறிஸ்துவை பின்பற்றும்படி பேதுரு அழைக்கப்பட்டார். அதற்குப் பின் பெந்தெகொஸ்தே நாளின்போது, அவர் ஒரு அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டார். பேதுரு, தைரியமும், அன்பும், விசுவாசமும் நிறைந்த ஒரு மனுஷனாக இருந்தார். இயேசுவின் அழைப்பிற்கு மிக ஆர்வத்தோடு கீழ்ப்படிந்து, தன்னுடைய வலையையும், படகையும், மீன் பிடிக்கும் தொழிலையும், பரிச்சயமான சூழ்நிலைகளையும் உடனடியாக விட்டுவிட்டு இயேசுவுக்கு பின் சென்றார் (மத். 4:18-20). யோவான்ஸ்நானனின் சீஷனாயிருந்த யோவான் மற்றும் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா தவிர, இயேசு யார் என்பதை அறிந்துகொள்வதில் முதல் சீஷனாய் இவர் இருந்தார் (யோவா. 1:40-41; மத். 16:16).

இயேசு, செசரியாவின் பகுதிக்கு வருவதற்கு முன்னதாகவே, அவர் தம்முடைய சீஷனாகிய சீமோனுக்கு, பேதுரு என்று மறுபெயர் இட்டார். அதற்கு கல் அல்லது பாறை என்று பொருள் (யோவா. 1:42; மத். 16:15-18). இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, சுவிசேஷங்களில் காணப்படும் சில விசேஷித்த பாடங்களுக்காக பேதுரு தனியே அழைத்து செல்லப்பட்டார். ஆண்டவரின் மறுரூப காட்சி (மத். 17:1-9), மறுதலித்ததைக்குறித்து முன்னறிவித்தல் (மத். 26:31-35), பேதுருவின் பாதங்களைக் கழுவப்படுவதற்கு கிறிஸ்துவை அனுமதிக்காத காரியம் (யோவா. 13:6-8) மற்றும் பெந்தெகொஸ்தே நாளில் உயிர்த்தெழுந்த ஆண்டவரைக்குறித்து சாட்சிக்கொடுத்த அவருடைய அன்பான வைராக்கியத்தையும் காணலாம் (யோவா. 20:2-3; அப். 2).

இந்த நிருபம் சரியாக மூன்று பகுதிகளாகப் பார்வையிடப்படலாம். இரட்சிப்புக்குரிய பாதையில் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் படக்கூடிய பாடுகளும், அதில், அவர்கள் காண்பிக்கக்கூடிய குணலட்சணங்களும் ஒன்றாம் அதிகாரத்திலிருந்து இரண்டாம் அதிகாரம் எட்டாம் வசனம் வரைக்கும் காணப்படுகிறது. அடுத்து, அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையோடு கிறிஸ்துவின் பாடுகள் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது என்பதை (1 பேது. 2:9) வசனம் முதல், நான்காம் அதிகாரம் முடிவு வரைக்கும் விவரிக்கப்பட்டுள்ளது. இறுதியாக, சகோதரர்கள் மத்தியில் மூப்பர்களின் முக்கிய பணி எவ்வாறு இருக்க வேண்டும் என்று ஐந்தாம் அதிகாரம் குறிப்பிடுகிறது.

குறிப்பிடுகிறது. இங்கு இரண்டு பொறுப்புகள் ஒருமித்து கொடுக்கப்படுகிறது - இராஜாக்கள் மற்றும் ஆசாரியர்கள் - மெல்கிசெதேக்கை போல வேறுபட்ட இரண்டு பொறுப்புகள் இங்கு ஒருமித்து கொடுக்கப்படுகிறது.

நித்தியமான இராஜாவாகிய நம்முடைய தேவனுடைய மகிமைக்கென்று நாம் அனைத்தையும் செய்வதற்கு இன்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது உயிர்த்தெழுதலில் - "பிதா குறித்த காலத்தில்," அவருடைய குமாரர்களாக நாமும் கிறிஸ்துவோடுகூட ஆயிரம் வருஷம் ஆட்சி செய்வோம். அதற்கு இந்நாளில், நம்முடைய சரீரங்களை தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்பொழுது வருங்காலத்தில் நாம் பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவோடு இணைந்து, இந்த பூமியின் சகல குடும்பங்களையும் ஆசீர்வதிப்போம். இப்படியாக, கிறிஸ்துவின் சரீரமும், இராஜரீகமான ஆசாரியர்களாக இருப்பார்கள்" (கலா. 4:1-2; ரோ. 12:1).

சபை எவ்வாறு பரிசுத்த ஜாதியாகும்? விசுவாசமுள்ள சகல கிறிஸ்தவர்கள் அவர்கள் எங்கிருந்தாலும், பரிசுத்த ஜாதியின் ஒரு பகுதியாக சேர்க்கப்படுவார்கள். இவர்கள் பல்வேறு இடங்களில் பரிசுத்தமே உருவம் கொண்டிருக்கும் கிறிஸ்து இயேசுவின் தலைக்கு ஏற்றவர்களாக, ஒரே ஜாதியாக வளர்ச்சிப் பெறுகிறார்கள். இக்காரியம் யாத். 19:6-ல் காணப்படுகிறது. முற்காலத்தில் தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்பட்ட ஜாதியாகிய எபிரெயர்கள் அவருடைய விசேஷித்த பொக்கிஷமாகக் கருதப்பட்டார்கள். அதுபோல, சுவிசேஷ யுகத்திலும், அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களிலிருந்து கீழ்ப்படி யாதவர்கள் தேவனால் புறக்கணிக்கப்பட்டார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய பரிசுத்த ஜாதி, ஒன்றிணைந்து ஒரே அரசாங்கமாக இந்த உலகத்தைவிட்டு பிரித்தெடுக்கப்படுவார்கள்,


சபை, தேவனுடைய ஊழியக்காரர்களாக முதன்மையாக இருப்பதை, (1 பேது. 2:11-17)-ல் முக்கியத்துவப் படுத்துகிறது. பரிசுத்தவான்களை, பரதேசிகளும் அந்நியர்களும் என்று 11-ம் வசனத்தில் பேதுரு அழைக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுலும், (எபே. 2:19)-ல், இதே வார்த்தையைப் பயன் படுத்துவது குறிப்பிடத்தக்கது. குடியுரிமை அற்றவர்களை அந்நியர் என்று கூறுகிறோம். பரிசுத்தவான்கள் தங்கள் குடியுரிமையை பரலோகத்தில் பெற்றிருப்பதினால் இந்த உலகத்தில் அவர்கள் பரதேசிகளாய் சஞ்சரிக்கிறார்கள். பரதேசிகள் என்ற வார்த்தைக்கு ஜோடியான வசனம், எபி. 11:13-ல் காணலாம். அங்கு பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள், பரதேசிகள் என்று அழைக்கப் படுகிறார்கள். ஒருவர் தன்னுடைய சொந்த தேசத்தை விட்டு தூர தேசமாகிய பரிசுத்தமான சுற்றுப்புறத்திற்கு பிரயாணிப்பவரே பரதேசி என்று அழைக்கப்படுகிறார். ஆகவே, நித்தியமான வீடு பரலோகத்தில் இருப்பதினால் இந்த பூமி உண்மையான கிறிஸ்தவர்களுக்கு நிரந்தரமானது இல்லை என்பதை அப்போஸ்தலர் கருதுகிறார். இந்த வெளிச்சத்தில் நாம் நம்மை காணும்போது, தேவனுடைய ஜனங்களுக்குக் கூடுதலான ஊக்கமளிக்கிறது.

இப்படிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சியை மாம்ச இச்சைகள் தடுத்து நிறுத்துவதினால், அவைகளை விட்டு விலகியிருக்கும்படி பேதுரு கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறார். ஏனெனில், இப்படிப்பட்ட மாம்சத்திற்குரிய இச்சைகள் சிறப்பான பரிசைப் பெறுவதிலிருந்து தடை செய்து சோர்வளித்துவிடும். ஆகவே, கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட மாம்ச சிந்தனைகளுக்கு எதிராகப் போராட வேண்டுமென்று பேதுரு ஆலோசனைக் கூறுகிறார்.

புது சிருஷ்டிகள், புற ஜாதிகளுக்கு மத்தியில் உண்மையாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்று பேதுரு எச்சரிக்கிறார். தங்களுடைய வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும், தங்களுடைய நல் நடத்தைகளை வெளிப் படுத்துவதே இதன் பொருளாகும். தேவனுடைய ஜனங்களைச் சுற்றியுள்ள புறஜாதி மக்கள் இவர்கள் நடத்தை களையும், வார்த்தைகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீரத்திற்கு எதிராயிருப்பவர்கள் அவர்களை தீயவர் என கூறலாம். ஆனால், அவர்களின் நல் நடக்கையைக் கண்டு, அவர்களின் பகைமைக்கு ஆதாரம் தேடினாலும் அதை கண்டடையாமல் அமைதியாகவும் கிறிஸ்துவோடுகூட மகிமையடையக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்கு சம்பந்தமில்லாத

2 பேதுரு

# விசுவாசம் மற்றும் யுகத்தின் முடிவு



"இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை." (2 பேதுரு 1:10)

Austin Williams

இயேசுவின் அப்போஸ்தலரும், ஊழியக்காரருமாகிய சீமோன் பேதுரு, தேவனால் அழைக்கப்பட்டவரைக் குறித்து பேசுகிறார். பலவீனங்களையும் பாவத்தின் பாரத்தையும் சுமந்து சோர்ந்து போனவர்களுக்கு, ஆறுதல் அளிக்கும்படிக்கு இயேசு அழைக்கிறார். தேவபக்தியுள்ள ஜீவனுக்கு தேவைப்படும் சகல காரியங்களையும் இயேசு தருகிறார். விசுவாசிகள் தங்கள் முன் நிலைமையிலிருந்து மாற்றம் அடைவதற்குத் தேவையான தெய்வீக வல்லமையைக்குறித்து (2 பேதுரு1:3) பேதுரு குறிப்பிடுகிறார். இப்படியாக, பலவீனமான விசுவாசிகளையும், விசுவாசமானது இணைத்து, ஒவ்வொருவருடைய இருதயங்களையும் சுத்திகரிக்கிறது. ஒவ்வொரு உண்மையான விசுவாசியும், அவர் கொண்டிருக்கும் விசுவாசத்தினால் தேவனுடைய பாதையில் நீதிமானாக எண்ணப்படுகிறார். ஆகவே, பேதுரு விசுவாசத்தின் ஒழுங்கைக்குறித்து வலியுறுத்துகிறார். தேவ பக்திக்குரிய சகல காரியத்திலும் இது நம்மை ஊக்குவிக்க வேண்டும். இப்படியாக, தேவனுக்கு முன் நம்மை நீதிமான்களாக நிறுத்துவதே இந்த விசுவாசம்.

தேவனுடைய வல்லமையினால் நாம் விசுவாசத்தை செயலாற்றும்போது, நம்முடைய சிந்ததையின் ஆவி உண்மையில் புதுப்பிக்கப படுகிறதா என்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவைகள் அவருடைய வாக்குத்தத்தங்களுக்கும், தெய்வீக சுபாவத்திற்கும் பங்காளிகளாக நம்மை ஆயத்தப்படுத்தும். மீண்டும், ஒருமுறை இந்த தெய்வீக சுபாவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு எப்பொழுதும் கொடுக்கப்படுவதில்லை.

ஒருவருடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதி செய்துகொள்வதற்கு அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும் என்று பேதுரு கூறுகிறார். நம்முடைய குணலட்சணங்களில் ஏற்ற வளர்ச்சி படிப்படியாகக் காணப்படுவதற்கு சில குறிப்புகளை வரிசைப்படுத்தியுள்ளார். "நாம் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாக" இருக்க வேண்டும் என்று கீழ்க்காணும் ஏழு காரியங்களில் இருக்கும்படி கூறுகிறார். விசுவாசம், தைரியம், நல்லொழுக்கம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் அன்பு."

**நல்லொழுக்கம்** என்பதற்கு பொறுக்கும் ஆற்றல் என்று பொருள். பலமுள்ள குணம், கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கும் விசுவாசத்தில் மேலும் ஒரு படியை கடப்பதாகும். எளிமையான ஆரம்பநிலை விசுவாசத்தை, பால்போன்ற வார்த்தைகளுக்குப் பின் ஒருவர் பலமான ஆகாரத்தைப் பெறுகிறார்கள். அப்பொழுது, சரீரம் சீராகவும் பலமுள்ளதாகவும் வளர்ச்சியடையும். அதனோடுகூட **அறிவு** சேர்க்கப்படுகிறது. அப்பொழுது சத்தியத்தோடும், தேவனுடைய சித்தத்தோடும் இணைந்து செயல்படக்கூடிய காரியங்கள் அதிகரிக்கும். இந்த அறிவோடு **இச்சையடக்கத்தையும்** கூட்டிச்சேர்க்க வேண்டும், அப்பொழுது, பூமிக்குரிய காரியங்கள் மேல் கட்டுப்பாட்டைக் கொண்டுவரலாம். இந்த இச்சையடக்கத்தோடு **பொறுமையை** கூட்டிச் சேர்த்தால், புன்னகையோடு தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கலாம். நமக்கு ஏற்படும் சோதனைகளைச் சகித்தால் பொறுமையைப் பெறலாம். அப்பொழுது, பாரமான சிலுவைகளையும், பிரச்சனைகளையும் அமைதலோடும், முழு அர்ப்பணிப்போடும் சுமக்கலாம். இப்படிப்பட்ட பொறுமையோடு **தேவபக்தியைக்** கூட்டினால், அவர் தேவனை உண்மையோடு ஆராதிப்பவரும் பக்தியோடும், பயத்தோடும் தேவனை தேடுகிறவருமாய் இருப்பார். அது மட்டுமல்ல, அதே பரலோக தந்தையின் ஊழியக்காரர்களாகவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும், ஒரே பாதையில் பயணிப்பவர்களும், ஒரே சொத்தை தங்களுடைய பங்காகப் பெற்றுக்கொள்கிறவர்களுமாகிய எல்லா

கண்டபோது பெற்றுக்கொண்டோம்" என்று பொருள்படுத்துகிறது.

இந்த காட்சி நிரந்தரமான ஒரு பதிவை விட்டுச்சென்றது. மேலும், "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" (மத். 16:28-17:9) என்ற பிதாவின் சத்தத்தையும் கேட்டார்கள்.

இந்த தீர்க்கதரிசனமான வார்த்தைகளைப் பெறுவோமா என்ற சவால் முன் வைக்கப்படுகிறது. ஏனெனில், கேட்கக்கூடிய சத்தத்தை விட தேவனுடைய வார்த்தைகள் அதிக முக்கியத்துவம் பெருகிறது. தீர்க்கதரிசனமான ஒரு தரிசனத்தைக் கண்டதாக பேதுரு உணர்ந்திருந்த போதிலும், "அதிக உறுதியான தீர்க்கதரிசனம் நமக்கு உண்டு" என்று பேதுரு கூறுகிறார். எந்த தரிசனத்தைக் காட்டிலும் அடிப்படையில் தேவனுடைய வார்த்தைகளே "அதிக முக்கியத்துவமும்" உறுதியையும் பெற்றிருக்கிறது என்று அவர் வலியுறுத்துகிறார்.

நம்மை நாம் மெய்ப்பித்துக் காட்ட வசனங்களைப் படிப்பதற்கு அழைப்பைப் பெற்றிருக்கிறோம். குறிப்பிட்ட ஒரு நபர் ஒரு காரியத்தை பிரசங்கித்துவிட்டார் என்பதற்காக நாம் அந்த கருத்தை ஏற்றுக்கொள்ளாமல், தேவனுடைய வார்த்தைகளினால் நிரூபிக்கப்பட்ட பின்னே அவைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். உண்மையான தீர்க்கதரிசிகள் மட்டுமல்ல, கள்ள தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள் என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம். ஆண்டவரின் வார்த்தைகளின் படியே பேசுவதாக இருவரும் கூறுகின்றனர்.

உண்மைக்கும் தவறுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் எவ்வாறு கண்டுபிடிப்பது? வசனங்களை வசனங்களோடு ஒப்பிட்டுப்பார்த்து, போதகர்களையும், மூப்பர்களையும் ஞானமாக தேர்வு செய்ய வேண்டும். ஒருவர் கூறும் சத்தியம், வசனங்களோடு இசைந்திருந்தால் மட்டும் போதாது, அவர்களுடைய வாழ்க்கையிலும் இது காணப்பட வேண்டும். மேலும், இவர்கள் முழுமையாக வேத படிப்புகளை ஆதிக்கம் கொள்ளாதபடிக்கு அறிந்த சத்தியங்களை தெளிவாக எடுத்துகூற ஆற்றல் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

**உண்மையா அல்லது பொய்யா?**

கள்ள போதகர்களையும், உபதேசங்களைப் போதிப்பவர்களையும் கண்டுபிடிப்பதற்கு அப்போஸ்தலனாகிய பேதுரு சில வழிமுறைகளை முன் அறிவிக்கிறார். ஒழுக்கமற்ற நடத்தை மற்றும் பேராசை அநேகரின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருக்கிறது. யாரெல்லாம் கிறிஸ்துவின் சுயாதீனத்திற்குள் தங்களுடைய மகிழ்ச்சிகளை வாக்களித்திருக்கிறார்களோ, அவர்கள் முன்னதாகவே அழியாமை பெறுவதற்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்" வேசிமார்க்கத்தாரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், "தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (1 கொரி, 6:8-11). சில கள்ள போதகர்கள் இயேசுவின் இரத்தத்தையும் கூட புறக்கணித்துவிடுகிறார்கள்.

ஒருவர் எப்பொழுதும் குறுக்குகளையும், முள்ளுகளையும் பிறப்பிப்பாரானால் - எதையும் அழிக்கக்கூடியவரானால் நாம் எச்சரிப்போடு இருக்க வேண்டும். ஒருவர் எப்பொழுது பேசினாலும் தவறான காரியங்களையே பேசுவாரானால் அவரை விட்டும், அப்படிப்பட்ட நபர்களைக் கொண்ட சபையை விட்டும் விலகியிருப்பது அவசியம்.

சத்தியத்தினால் ஒருவர் பிரகாசிக்கப்பட்டு அதற்குப் பின் அவர் இருளில் செல்வாரானால், "அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!" (மத். 6:23) என்று வசனங்கள் கூறுகிறது. ஒருவர் விழும்போது, முதலில் ஒரு பழக்கம் அல்லது ஒரு உபதேசத்தில் தவறி, அதற்குப் பின் பல உபதேசங்களிலும் பழக்கங்களிலும் தவறி, மொத்தத்தில் இக்காலத்து சத்தியத்தைப் பொறுத்தவரையில் முழுமையான இருளை சென்றடையும் வரைக்கும் நடத்தப்படுகிறார்கள். ஆயினும், அவர் ஆண்டவரை நேசிப்பதாகக் கூறலாம்.

ஜலப்பிரளயத்திற்கு முன் பாவம் செய்த தூதர்கள், சோதோம் கொமொராவின் ஜனங்கள் மற்றும் பீலேயாமின் பாவங்களை மாதிரியாக முன்வைத்து நவீன காலங்களில் நாம் சந்திக்கும் சோதனைகளிலிருந்து விடுபட பேதுரு எச்சரிக்கிறார் (2 பேது. 2:4-6). கிறிஸ்தவர்களாக இருக்கிறோம்

வார்த்தைகளையும், தீர்க்கதரிசனங்களின் வார்த்தைகளையும் அவர் நமக்கு நினைப்பூட்டுகிறார். யுகத்தின் முடிவில் எழும்பும் பரியாசக்காரர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி கூறுகிறார். அவர்கள் நம்முடைய ஆண்டவரின் வருகையைக் குறித்தும் அல்லது வந்திருத்தலைக்குறித்தும் பரியாசம் பண்ணி, தங்களுடைய சொந்த விருப்பத்தைப் பின்பற்றுவார்கள் என்று கூறுகிறார். இப்படிப்பட்ட காரியங்கள் சபைக்கு வெளியிலிருந்து மட்டுமல்ல, யுகத்தின் முடிவில் சபைக்குள்ளும் காணப்படும் என்கிறார். ஆகவே, முடிவு காலத்து ஜனங்களை நோவாவின் நாட்களில் ஜலப்பிரளயம் வருவதற்கு முன் அவர்கள் இருந்த நிலைமைக்கு ஒப்பிட்டு பேசுகிறார். நோவா, வரக்கூடிய அழிவைக்குறித்துப் பேசி, வெட்டாந்தரையில் ஒரு மிகப்பெரிய பேழையை ஆயத்தம் செய்தபோது, அதுவரையிலும் மழையைக் காணாத ஜனங்கள் நோவாவை பரியாசம் செய்தனர். (லூக். 17:26)-ல், "நோவாவின் நாட்கள்" என்று லூக்கா குறிப்பிடுகிறார். அந்நாட்களில் நோவா இருந்ததுபோல, "மனுஷகுமாரனுடைய நாள்" என்று கூறும்போது, நம்முடைய ஆண்டவர் வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. நோவாவின் நாட்களில் ஜனங்கள் துணிகரமாக அறியாமையில் வீழ்ந்ததுபோல, யுகமுடிவிலும் இப்படிப்பட்ட பரியாசக்காரர் கேள்வி எழுப்புவர். வருவதாகக் கூறப்படும் அந்த வாக்குத்தத்தம் எங்கே? சகல காரியங்களும் ஆதியில் இருந்ததுபோல தொடர்ந்து இருக்கிறதே என்று கூறி, மனப்பூர்வமாய் பரியாசக்காரர் அறியாமையில் விழுந்து போவார்கள்.

சொல்லர்த்தமாக, "கர்த்தருடைய நாள் திருடன் வருகிறவிதமாய் வரும்" (2 பேது. 3:10). "கோதுமையோடு கூட களைகளும் அறுப்புக்காலம் மட்டும் இணைந்து வளரட்டும் என்று ஆண்டவராம் இயேசுவும் கூறுகிறார்" (மத். 13:30). ஆனால், கிறிஸ்து வந்திட்டபோது, (மகிமையோடு வருவதற்கு முன்) ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் பாபிலோனி லிருந்தும், சகல மத பிரிவுகளிலிருந்தும் வெளியே வரும்படி அழைப்பைப் பெற்றார்கள். அந்நேர முதல் நம்முடைய விசுவாசத்தைக் கிரியைகளில் காட்ட வேண்டும்,

"பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2 பேது. 3:10). பல முக்கியஸ்தர்கள், அரசியல்வாதிகள், பொதுநல தொண்டு செய்பவர்கள் மற்றும் மதத் தலைவர்களின் உண்மைகள் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். என்னுடைய கிரியைகள் வெளிப்படுத்தப் படும் பொழுது, நான் அவமானப்படாமல் இருக்க, எப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை நான் வாழ வேண்டும்? என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் நம்மிடத்தில் கேட்டுக்கொள்ள வேண்டும்.

"இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" (2 பேது. 3:11, 14) என்று பேதுரு நம்மிடம் கேட்டுக் கொள்கிறார்.

வெளிச்சத்தில் நடக்க வேண்டும் என்று யோவான் கூறுகிறார். நாம் இவ்வாறு நடக்கிறோமா என்று நித்தமும் நம்மை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஒளியை விட்டு நழுவி செல்வதே மாம்சத்தின் இயல்பாய் இருக்கிறது. ஆகவே, நித்தமும் நம்மை திருத்திக்கொள்ள வேண்டும். நல்ல ஐக்கியம் கொண்டு, நம்மைபோல் ஒளியில் நடப்பவர்களிடமிருந்து உதவிகளைப் பெறுவதே ஒளியில் நடப்பதன் பொருளாகும்.

இக்காரியம் நம்மை **மூன்றாவது** செயல்முறை பாடத்திற்கு வழி நடத்துகிறது. நாம் தோல்வியடைகிறோம்! "நமக்குப் பாவமில்லையென போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர் களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது" (1 யோவா. 1:8-10).

ஒளியைக் கண்டு, அதை பிரசங்கித்து அதில் நடப்பது மட்டுமே நம்மை பூரணப்படுத்துவதில்லை. நாம் சுதந்தரித்த அபூரணமான நிலையானது எல்லா மனித இயல்புகளோடு இணைக்கப்பட்டிருப்பதினால் தோல்வியடைகிறோம். இந்த கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது, நாம் என்ன செய்ய வேண்டும்?

முதலில், நாம் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப படுவதற்கு ஒரு வழியுண்டு என்று அப்போஸ்தலர் கூறுகிறார். "அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மை சகல பாவத்திலிருந்தும் சுத்திகரிக்கும்" என்று 7-ம் வசனத்தின் பிற்பகுதி குறிப்பிடுகிறது. பாவமற்ற நிலையில் நாம் தேவனுக்கு பணி செய்ய இயலாது என்பதை தேவன் நன்கு அறிந்திருக்கிறார். ஆயினும், இயேசுவின் இரத்தத்தின் வழியாக நம்முடைய பாவங்கள் மூடப்படுவதற்கு பிதாவாகிய தேவன் ஒரு ஏற்பாட்டை செய்தார். நம்முடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டது என்று நாம் விசுவாசித்தால் மட்டும்போதும். கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் தேவனால் அங்கீகரிக்கப் படுகிறோம் என்பதே இதன் பொருளாகும். ஒரு காரியத்தை பாவம் என்று உணர்ந்தால், கிறிஸ்துவின் பலியின் மூலமாக பரலோக தந்தையினிடத்தில் மன்னிப்பைக் கேட்டு வேண்டிக் கொள்கிறோம். பாவத்தை ஒரு இயல்பான காரியம் என்று நம்முடைய அன்றாட வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளலாம் என்று பொருள்படுகிறதா? நிச்சயமாக இல்லை! நாம் எப்பொழுதும் பாவத்தை நமக்குள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அதை அறிந்தவர்களாக, அதற்கு எதிரான போரை நித்தமும் தொடுப்பவர்களாக இருக்கிறோம். பாவத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய வாழ்க்கையில் ஒரு இயல்புக்கு மாறான காரியமாகப் பார்க்க வேண்டும். அதோடுகூட நாம் என்றும் இசைந்து வாழக்கூடாது. மனப்பூர்வமாய் என்றும் பாவம் புரியவே கூடாது. ஆனால், நாம் பாவம் செய்யும்பொழுது,

"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவா. 2:1). இதுவே, தேவன் நமக்காக செய்திட்ட ஒழுங்காகும். விசுவாசத்தினால் அதை உணர்ந்துகொண்டு சுத்திகரிக்கப்படுகிறோம். விழுந்துபோன மாம்சத்தில் பாவத்தில் இடறிவிழும் நாம் ஒரு பக்கம் தேவனுடைய பிரமாணங்களுக்கு ஜாக்கிரதையாகக் கீழ்ப்படிய முயற்சிக்க வேண்டும். இப்படிப்பட்ட கீழ்ப்படிதல் நமக்குள் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் நிலை நிறுத்தச் செய்து, ஒவ்வொரு பிரமாணத்திற்குப் பின்னும் இருக்கக்கூடிய தேவனுடைய அன்பை உணரச் செய்யும்.

இக்காரியம் நம்மை **நான்காவது** செயல்முறை பாடத்திற்கு அழைத்து வருகிறது. சகோதரர்களிடம் அன்பு செய்வதே தேவனிடத்தில் அன்பு செய்வதின் பொருளாகும். வெளிச்சத்தின் பாதையில் நடப்பதில் இது ஒரு பகுதியாகும். தொடர்ந்து எதிரிடையாக இருப்பவர்களிடம் எவ்வாறு அன்பு செய்ய முடியும்? அவரை தேவன் எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்வது ஒரு வழி. அடுத்து, தேவன் நம்மை பார்ப்பதுபோல

ஓநாய்களிடமிருந்து நிச்சயமான பாதுகாப்பைப் பெறுவோம். "ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள். நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். உங்களை வஞ்சிக்கிறவர்களைக்குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்" (1 யோவா. 2:24-26).

**பகுதி 3:1 யோவா.3:1 - 1 யோவா3:24**

இந்த முழு நிருபத்திலும் சில முக்கியமான செயல்முறை பாடங்கள் அடங்கியுள்ளது. **ஏழாவது** செயல்முறை பாடம் மூன்றாம் அதிகாரத்தில் உள்ள 14-ம் வசனத்தில் காணப்படுகிறது. "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மரணத்திலே நிலை கொண்டிருக்கிறான்."

எல்லாவித அன்பும் மகிழ்ச்சியை அளிக்கும். ஆனால், தெய்வீக அன்பு மட்டுமே ஜீவனைக் கொடுக்கும். முதல் அன்பை நீங்கள் பெறும்போது, எவ்வளவு ஜீவனுள்ளவர்களாக இருந்தீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்? அப்பொழுது இந்த உலகத்தில் அனைத்தும் அழகாகவும், அற்புத மாகவும் தோன்றவில்லையா! கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் மத்தியில் தேவன் செய்யும் ஜீவனைக் கொடுக்கும் வேலைகளைப் பார்க்கும் பொழுது தேவன் அவர்களை நேசிப்பதினால் நாமும் அவர்களை நேசிக்கிறோம். அப்பொழுது நாம் உண்மையில் தெய்வீக அன்பிற்குள் கடந்துசெல்லக் கூடியவராய் இருக்கிறோம். தேவனுடைய ஜனங்கள் மத்தியில் நாம் அனுபவிக்கக்கூடிய ஆறுதலையும், தேறுதலையும் தேவன் அனைவருக்கும் கொடுக்க விரும்புகிறார். தேவன் உங்களுக்குக் கொடுத்த வாழ்க்கையில் சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும் என்று விரும்பினால், தேவன் நேசிக்கக்கூடிய ஜனங்களை நீங்களும் நேசிக்க வேண்டும். தேவனுடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் இவ்வகையான குணங்களை உண்மையான சந்தோஷத்தைக் கொண்டுவரும்.

வேதாகமத்தில் மிகுந்த ஆறுதல் அளிக்கும் வசனம், "நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்" (வச. 20). நம்முடைய அபூரண நிலையின் காரணத்தினால், நம்முடைய சிந்தைக்கும், உணர்வுகளுக்கும் இடையில் அடிக்கடி முறிவு ஏற்படுகிறது. இந்நாளில் இந்த உலகத்தில் மிக வீரியமாகக் காணப்படும் வியாதி - மன அழுத்தமே. இப்படிப்பட்ட மன அழுத்தங்கள் சமநிலையற்ற சரீரங்களில் காணப்படுகிறது. காரணமில்லாமல் ஒருவர் பயங்கரமான மன அழுத்தத்தை உணரலாம். ஆண்டவருக்கென்று அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு இது ஒரு கடினமான சோதனையாக இருக்கக்கூடும். ஒரு சகோதரனாவது, சகோதரியாவது உடல் ரீதியாக மன அழுத்தம் அடைந்தால், அவர்கள் அதிகமான குற்ற உணர்வில் அகப்படுவர். ஏனெனில், அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியின் மேல் விசுவாசம் உள்ளவர்களாக பல விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களையும் பெற்றிருப்பதினால் அவர்கள் அதிகமான குற்ற உணர்வுக்குள் அகப்படுகிறார்கள்.

யோவானின் இந்த வேத பகுதி அற்புதவிதமாய் இப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்கிறது. "நம்முடைய இருதயமே நம்மை குற்றவாளிகளாகத் தீர்க்குமானால்" என்ற காரியம் காரணமில்லாமல் குற்ற உணர்வைப் பெறுவது அல்லது காரணமில்லாமல் மனம் அழுத்தம் அடைவதைக் குறிக்கும். "தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்" என்பதே இதற்கு சரியான ஔஷதமாய் இருக்கிறது. நம்மை புரிந்துகொள்ளக்கூடிய தேவனை நாம் கொண்டிருக்கிறோம்! ஆகவே, பாரத்தை முழுமையாக நீக்காவிட்டாலும் சுமையின் பாரம் குறைக்கப்படுகிறது. இதுவே, **எட்டாவது** செயல்முறை பாடமாகும்.

**பகுதி 4:1 யோவா.4:1 - 1 யோவா5:21**

**ஒன்பதாவது** செயல்முறை பாடம், 1 யோவா. 4:1-3 வசனங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட விக்கிரக ஆராதனையினால் அதை தொலைத்திருக்க வேண்டும். தேவனுக்கு பதிலாக ஏதோ ஒரு காரியத்தை வைத்திருக்க வேண்டும்.

கூடுமான விக்கிரங்களை ஒருவர் வரிசையாக பட்டியலிடலாம். ஆனால், நம்முடைய வாழ்க்கையில் முக்கியமாக இடம் பெறுவது என்னவென்று நித்தமும் ஆராய்ந்து அறிந்துகொள்வதே நமக்குரிய பாடமாகும். தேவனுக்கு பதிலாக எந்த காரியமும் இடம் பெறக்கூடாது என்பதில் நாம் மிக கவனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். உண்மையில் விக்கிர ஆராதனை நேர்த்தியான காரியமாக இருக்கலாம். ஆகவே, நம்முடைய முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் முழு பலத்தோடும் அன்புகூருகிறோமா என்பதை ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும். தேவனை காட்டிலும் நம்முடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு காரியம் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தால், நம்முடைய வாழ்க்கையிலிருந்து அவைகளை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிருபத்தை யோவான் தன்னுடைய நூறாவது வயதில் எழுதியிருக்க வேண்டும். இத்தனை வருடங்களாக ஞானத்தைப் பெற்றிருக்கும் அவர், சகோதர சகோதரிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிக முக்கயமான செயல்முறை பாடங்களை எழுதியிருக்கிறார் என்று நாம் நம்புகிறோம்.

நாம் இங்கு ஆராய்ந்து பார்த்த பாடங்களைக்காட்டிலும் அதிகமான பாடங்கள் இந்த நிருபத்தில் உள்ளது. அவருடைய நிரூபம் எப்பொழுது தோண்டினாலும் சத்தியம் என்னும் பொக்கிஷங்களைக் கொடுக்கக்கூடிய பலனுள்ள சுரங்கமாகக் காணப்படுகிறது.

அன்பை நாம் கருத்தில் கொண்டால் - தன்னுடைய ஒரே பேறான குமாரனையே பலியாக செலுத்துவதற்கு அவர் துணிந்துவிட்டார் என நாம் அறிவோம் (யோவா. 3:16). ஆகவே, அன்பின் பிரமாணம் எவ்வளவு முக்கியமானது என்று யோவான் மீண்டுமாக சகோதரருக்கு நினைவுபடுத்துவது ஆச்சரியம் அல்லவே. மற்ற எல்லா பிரமாணங்களைக் காட்டிலும் இது மேலானவை. இதில் நல்ல அறிவும் அல்லது அதற்கேற்ற சாட்சியும் இதில் அடங்கும்.

## சபையிலுள்ள அனைத்து அங்கத்தினரும் ஒரேவிதமான பரிசை பெறுவார்களா?

"இல்லை," என்பதே இக்கேள்விக்கான பதிலாகும். ஏனெனில், "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர் (மத். 22:14) என்று வாசிக்கிறோம். 144,000 பேர் மட்டுமே தெரிந்துகொள்ளப்பட்ட விசுவாசிகள் என்று வசனங்கள் தெளிவாகக் காட்டுகிறது. ஆயினும், மிக சிலராகிய உண்மை நிலையைப் பெற்றுக்கொள் வதற்கு எத்தனை பேர் அழைக்கப்படுகிறார்கள் என்று நமக்கு தெளிவாகக் கொடுக்கப்படவில்லை.

நம்முடைய இக்காலத்து நியாயத்தீர்ப்பு ஒருவர் மேலொருவர் வைத்திருக்கும் அன்பையும், அதை செலுத்துவதற்காக நாம் எடுக்கக்கூடிய முயற்சிகளின் அடிப்படையிலும் நடத்தப்படுகிறோம். அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில் நாம் சகோதரர்களோடு ஐக்கியத்தில் வாசம் செய்யாவிட்டால் இக்கேள்விக்கு இடமே இல்லை. நாம் கிறிஸ்துவின் மணவாட்டிகளாக இருப்பதற்கு வாய்ப்புமில்லை - மணவாளனோடு ஐக்கியப்படுவதற்கு சூழ்நிலையும் இல்லை.

4-ம் வசனத்தில், அப்போஸ்தலனாகிய யோவான் இக்கருத்தைக்குறித்தே பேசியிருக்க வேண்டும். சபையிலுள்ள சிலர் மட்டுமே சத்தியத்தின் அடிப்படையில் நடந்து இறுதியாக தேர்வு செய்யப்படுவதற்கு வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்ற கூறுகிறார்.

தங்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளாமல், முழுமையாக பரிசை பெறாமல் வாய்ப்பை நழுவ விடுபவர்கள் நேரடியாக இரண்டாம் மரணத்திற்கு செல்வர் என்று பொருளல்ல. மாறாக, அவர்கள் கிரியைக்குத் தக்க குறைவான பலனை அடைவார்கள். கிறிஸ்துவின் சிங்காசனத்திற்கு முன்னும் அவருடைய மணவாட்டிக்கு முன்னும் திரள்கூட்டத்தாராக நிற்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். (1 கொரி. 3:13, 15) சிலர் தங்களுடைய அர்ப்பணிப்பை முழுமையாக நிறைவேற்றாமலும் சபையில் இருப்பதாக அப்போஸ்தலனாகிய யோவான் 4-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார்.

நாம் ஒவ்வொருவரும் இந்த சிந்தையை எவ்வாறு கருத்தில் கொள்கிறோம் என்று எண்ணி, "தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் சகோதர சகோதரிகளிடம் முழுமையாக அன்பு செய்து, தங்களுடைய திராணிக்கு மேலாக எல்லா விஷயங்களிலும் அவர்களுக்கு உதவியாக இருக்கிறீர்களா?" என்ற கேள்வியைக் கேட்போம்.

## கள்ள தீர்க்கதரிசிகளின் போதனைகளுக்கு யோவானின் எச்சரிப்புகள்


அநேக கள்ள தீர்க்கதரிசிகள் சாத்தானின் ஊழியர்களாக சபைக்குள் நுழைந்து, கிறிஸ்துவின் உண்மையான உபதேசங்களை மூடி அவற்றை சாத்தானுடைய கள்ள உபதேசங்களாக மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள் என்ற உண்மையை அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார்.

தேவனிடத்திலிருந்து இயேசு மாம்சத்தில் வரவில்லை என்ற கள்ள உபதேசத்தை பிரஸ்தாபிப்பதே சாத்தானுடைய ஊழியக்காரர்கள் வைத்திட்ட முக்கியமான சவால் என்று யோவான் 7-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். அடிப்படையாக அவர் வழியாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வரவிருக்கும் நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையை அவர்கள் அழிக்க முயற்சித்தார்கள்.

மனிதன் சரீரத்தையும், ஆத்துமாவையும், ஆவியையும் உடையவர்கள் என்று அவர்கள் கற்பித்தார்கள். மனுஷனுடைய சரீரமும் பூமிக்குரியதாய் இருப்பதால் அவைகள் தீமையாக இருக்க வேண்டும். ஆனால், ஆத்துமாக்குள் இருக்கும் ஆவி மட்டுமே தெய்வீக நிலைபெறும். ஆவி

3 யோவானிலிருந்து ஒரு செயல்முறை பாடம்

# தியோத்திரேப்பு என்னும் ஒரு கடினமான சகோதரன்



"என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை." (3 யோவா. 4)

O.B.Elbert

"நம்முடைய ஆண்டவர் இங்கிருந்தால், எல்லாவற்றையும் சரி செய்திருப்பார்," "பவுல் மட்டும் நம்மோடிருந்தால் இந்த சூழ்நிலையில் எது சரி என்று கூறியிருப்பார்" அல்லது "சபையில் சாட்சி மற்றும் நல்மதிப்பைப் பெற்ற மூத்த சகோதரர்களின் மரணத்திற்குப் பின், அவர் இருந்தால் நம்முடைய பிரச்சனைகளைத் தீர்த்திருப்பார்," என்று நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா?

நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் மாதிரியை புரிந்துகொண்டு நேசிக்கும்பட்சத்தில், அவரை சேவிக்க தகுதி பெற்றவர்கள் எல்லா பிரச்சனைகளையும் மூத்தவராகிய ஒரே நபர் தீர்த்துவிடுவார் என்று எதிர்பார்க்க மாட்டார்கள். இயேசுவின் பிரசன்னமும், போதகமும் இல்லாதபோது சீஷர்கள் நித்தமும், அவர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதை நாம் நினைவுகூர வேண்டும். இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்ற வாக்குவாதம் சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பவுல் மற்றும் பர்னபாவிடம் சில முரண்பாடான கருத்துக்கள் காணப்பட்டது. பவுல், பேதுருவை ஒரு சூழ்நிலையில் கடிந்துகொள்ள வேண்டியதாயிருந்தது. மேலும், சகோ. ரஸல் காலத்திலும்கூட, சபையில் அவர் பெற்றிந்த நிலைக்கு சவாலாக சில சகோதரர்கள் மறைமுகமாக அவருக்கு எதிராக செயல்பட்டனர். இப்படியாக, சகோதரர்கள் மத்தியில் எப்பொழுதும் பிரச்சனைகள் காணப்பட்டது.

"நமக்கொரு உறுதியான மூப்பர் இருக்கும்பட்சத்தில், பொறுப்புகளை சரியாக நிறைவேற்றி, சரி எது என்றும், தவறு எது என்றும் அவர் தெளிவாகக் கூறுவார்" - என்று நாம் யோசிக்கலாம். இவைகள் நம்முடைய வாழ்க்கையை எளிதாக நடத்திச் செல்லும் அல்லவா? இல்லை - இது தனிப்பட்ட பொறுப்புகளை தவிர்ப்பதினால் இப்படிப்பட்ட வாழ்க்கையை எளிதாக நடத்த முடியாது. கடினமான சூழ்நிலைகளில் தனிப்பட்ட நியாயத்தீர்ப்பை செயலாற்ற இது தேவைப்படுகிறது. நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி குன்றிவிடும். "பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" (எபி. 5:14). இது பலமான ஆகாரத்தை உட்கொள்ளுபவர்களுக்கு மட்டுமே,

சகோரர்களிடத்தில் காணப்பட்ட உபசாரத்தையும், தாராள குணத்தையும் குறித்து, சீஷர்களாகிய தேமேத்திரியு மற்றும் காயுவை குறித்து யோவான் புகழ்ந்து பேசுகிறார். இப்படிப்பட்ட குணங களையுடைய சகோதரர்களுக்கு ஒத்துழைக்கும்படி துரிதப்படுத்துகிறார். இப்படியாக, சத்தியத்தைப் பேசுகிறவர்கள் மட்டுமல்ல, சத்தியத்தில் நடப்பவர்களையும், மனத்தாழ்மையோடு ஊழியம் செய்பவர்களையும் எந்த பூமிக்குரிய பரிசுகளையும் விரும்பாமல், இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடிய சகோதரர்களுக்கு நாம் துணை நிற்க வேண்டும். தேவனுடைய ஜனங்கள் மத்தியில் சகோதரத்துவத்தையும், ஐக்கியத்தின் ஆவியையும் ஊக்குவிப்பவர்களுக்கு எப்போதும் நாம் உதவி செய்ய வேண்டும்.


தேமேத்திரியுவுக்கும், காயுவுக்கும், மாறுபட்ட குணமுடைய ஒரு சகோதரன், சபையில் யோவான் பெற்ற அதிகாரத்தை தைரியமாக எதிர்த்து நின்றான். அவன் கள்ள போதகனாகிய - தியோத்திரேப்பு. கபடமுள்ள கசப்பான பிட்சியை அவனிடத்தில் நாம் காணலாம். "அப்போஸ்தலனாகிய யோவானை எதிர்ப்பதற்கு எவ்வளவு தைரியம் வேண்டும்!" என்று நாம் அவனைக்குறித்து கோபமடையலாம்.

அவன் செய்த குற்றங்களை 9 மற்றும் 10-ம் வசனங்களில் காணலாம்.

(1) "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்.

யூதாவின் நிருபம்

# விசுவாசிகள் செய்யக்கூடியவைகள் மற்றும் செய்யக்கூடாதவைகள்



"இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா, பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசுகிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது:" (யூதா 1)

இப்படியாக யூதா தம்மை அறிமுகப்படுத்துகிறார். அவர் ஒரு அப்போஸ்தலனும், இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரனுமாய் இருக்க வாய்ப்புண்டு. தேவனாலும், கிறிஸ்து இயேசுவினாலும் சுத்திகரிக்கப்பட்ட தேவ ஜனங்களுக்கு ஊக்கமளிக்கும்படியாக நம்முடைய பொதுவான இரட்சிப்பைக் குறித்து இந்த நிருபத்தை எழுதத் துவங்கினார். "உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது." (யூதா 2) (2 பேது. 1:2-8) வசனங்களிலுள்ள சாராம்சத்திற்கு ஒப்பாக இதுவும் ஒரு பொதுவான எச்சரிப்புகளைத் தரும் நிரூபமாயிருக்கிறது. இவைகள் ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தேவையான சகல எச்சரிப்புகளையும் எல்லா கோணங்களிலும் தேவனுக்குப் பிரியமான காரியங்களையும் வலியுறுத்துகிறது.

யூதா திடிரென்று நிரூபத்தின் பொருளை சில பேய்த்தனமான வளர்ச்சியைக் கண்டு மாற்றுகிறார். ஆதியிலே, பரிசுத்தவான்கள் அறியாதபோது, சில பக்தியற்ற மனிதர்கள், சபைக்குள் நுழைந்தனர். இவர்கள், "நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டினார்கள்" (யூதா 4). இக்காரியத்தினிமித்தம் யூதா எச்சரிக்கிறார். "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டும்" (யூதா 3) என்று கூறி நாம் பெற்ற சத்தியத்திற்கு உண்மையாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

"ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே" (ரோ. 6:1) என்று பவுல் இப்படிப்பட்ட ஒரு கேள்வியையும் எழுப்புகிறார்.

ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்களைக் கண்டுபிடிக்க உதவும் மூன்று பாவங்களை யூதா வரிசைப்படுத்துகிறார். விசுவாசமற்ற புரட்சி, கீழ்ப்படியாமை மற்றும் எல்லையற்ற இச்சை. தேவன் இஸ்ரயேல் ஜனங்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்து வந்தும்கூட, தேவன் அவர்களின் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்வார் என்று அந்த ஜனங்கள் அவர் மேல் விசுவாசம் வைக்கவில்லை (எண். 14; சங். 95:11). ஜலப்பிரளயத்திற்கு முன்னால் தூதர்கள் மனுஷ ரூபத்தை எடுத்து, தங்களுக்கென்று பெண்களைத் தெரிந்தெடுத்து, இராட்சத பிள்ளைகளுக்கு ஒப்பான பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். (மனித வழியாகத் தூதர்களின் குமாரர்கள் பிறந்தபோதிலும், இவர்கள் ஆதாமின் மரணத்தீர்ப்பின் கீழ் இருக்கவில்லை. ஆகவே, அவர்களை ஜலப்பிரளயத்தினால் அழிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. துல்லியமாக எந்த காலத்தில் என்று வேதாகமத்தில் இதைக்குறித்து பதிவுகள் இல்லாவிட்டாலும் , "ஏனோக்கின் புத்தகம்" (6:6), யாரேதின் நாட்களில் சுமார் ஜலப்பிரளயத்திற்கு பதினோரு நூற்றாண்டுகளுக்கு முன் இது நடைப்பெற்றிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. (யூதா 14, 15 வசனங்கள் இந்த வார்த்தைகளோடு ஒத்துப்போகிறது) (ஆதி. 6:1-4, 11; 2 பேது. 2:4) சோதோம் மற்றும் அவளுடைய குமாரத்தியின் பட்டணங்கள் அனைத்தும் கட்டுப்பாடின்றி வேசித்தனத்தில் ஈடுபட்டனர். மேலும், மிருகங்களோடும் மற்றும் தூதர்களோடும் அவலட்சணமான காரியங்களை நடப்பித்தனர் (ஆதி. 19, 2 பேது. 2:6-8). இந்நாளில் நாமும்கூட கவனமாய் இருக்கக்கடவோம்.

- தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்து அதன்படி ஜீவிக்க வேண்டும்.
- தேவனுடைய ஜனங்கள் புரட்சிகளையும் மற்றவர்களின் தேவையற்ற முறைக் கேடுகளையும் தவிர்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட குற்றம் சாட்டும் ஆவியை நமக்குள் இருந்து பிடுங்கியெறிய வேண்டும்).

காயீன் பீலேயாம் மற்றும் கோராகு என்பவர்களின் குறிப்பு, பொறாமை, பேராசை மற்றும் ஆளுகை செய்யும் விருப்பங்கள் போன்ற குணங்களுக்கு எதிரான எச்சரிப்புகளாய் இருக்கிறது. இப்படிப்பட்ட மறைந்திருக்கும் களைகள் உங்கள் அன்பின் விருந்துகளில் பங்கேற்று உங்கள் ஆவிக்குரிய பற்களை நொறுக்கிவிடும். தண்ணீரற்ற மேகங்களைப்போல இரண்டுதரஞ் செத்து வேரற்ற மரங்களுக்கு ஒப்பாகக் கூறப்படும் இவர்கள் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையற்றவர்களாக இரண்டாம் மரணத்தில் இடம் பெறுவார்கள்.

தேவனுக்கு பிரியமான பலி செலுத்துவதற்குரிய ஆலோசனைகளை காயீன் தேவனிடத்தில் கேட்காமல், தன்னுடைய சொந்த வழியைப் பயன்படுத்தினான். நிச்சயமாக பலி செலுத்தும் விதத்தைக்குறித்து, ஆதாம் அவர்களுக்கு கற்பித்திருந்திருக்க வேண்டும். ஆபேலின் பலியை ஏற்றுக்கொண்டதைக் கண்ட காயீன் மிகுந்த பொறாமைக் கொண்டான். அந்த பொறாமை உச்சக்கட்டத்தை அடைந்து, தன் சகோதரனைக் கொலை செய்ய வழிவகுத்தது.

இப்படிப்பட்ட தீமையிலிருந்து நாம் நம்மை அவசியமாகக் காத்துக்கொள்ள வேண்டும். விசேஷமாக, புதிய நபர்கள் நம்முடைய ஐக்கியத்தில் வரும்பொழுது நாம் எப்படிப்பட்ட சிந்தனைகளைப் பெற்றிருக்கக்கூடாது என்று யூதா எச்சரிக்கிறார். மற்றவைகள் சபைக்குள்ளிருந்து எழும்புகிறது. "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" (அப். 20:29) என்று பவுலும் எபேசு பட்டணத்து மூப்பர்களை எச்சரிக்கிறார்.

அடுத்து, வெகுமதிகளினிமித்தமாக தொடர்ந்து தேவனுடைய எச்சரிப்புகளையும், வழிநடத்துதல்களையும், ஆலோசனைகளையும் புறக்கணித்து, அவைகளை எதிர்த்து நின்ற பீலேயாமைக்குறித்து யூதா குறிப்பிடுகிறார். தேவனுடைய சித்தத்தை சத்தியத்தின் காரியங்களில் நன்கு அறிந்த நாம் எந்த உலகப்பிரகாரமான நன்மைக்காகவும் இவைகளை விட்டுவிடக்கூடாது.

மூன்றாவது எடுத்துக்காட்டாக, மோசேக்கு எதிராக மனுஷரைக் கூட்டின லேவியனாகிய கோராகு பற்றிப் பேசப்படுகிறது. தானும் பரிசுத்தமுள்ளவனாக இருப்பதை அறிவித்து மோசேக்கு மேலாக தன்னை நிறுத்திக் கொள்ளும்படி புரட்சி எழுப்பினான். இவர்கள் செய்த தவறை சுட்டிக்காட்டும்படி பிதாவாகிய தேவன், பூமி பிளந்து இவர்கள் அனைவரையும், அவர்களின் குடும்பத்தாரோடு 250 பேர்களை விழுங்கும்படி செய்தார் (எண். 16:1-35). ஒருவரையும் குறித்து தீமையான காரியங்களைப் பேசாதபடிக்கு யூதா நம்மை எச்சரிக்கிறார். தேவன் அழைத்தவர்களுக்கு எதிராக நாம் ஒன்றும் பேச வேண்டாம். நம்முடைய சபைகளில் இப்படிப்பட்ட தவறுகள் முன்னதாகவே நுழைந்துவிட்டது.

**ஏனோக்கின் தீர்க்கதரிசனம்**

"தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லா வற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங் கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்" (யூதா 15) என்று ஏனோக்கு குறிப்பிடுகின்றார். (ஏனோக்கே ஆதாமின் ஏழாம் தலைமுறை என்று யூதா குறிப்பிடுகின்றார். இவ்வளவு சிறிய நிரூபத்தில் ஏனோக்கை குறித்த எண்ணிக்கையின் அடையாளங்களை தேவையற்ற விவரங்களாக யூதா அறிமுகப்படுத்துவதின் காரணம் என்ன? அவருடைய ஆயுசு நாட்களில் இந்த எண்ணுக்குரிய அடையாளம் கொடுக்கப்பட்டுள்ளது. 365 வருடங்கள் என்று ஆதி. 5:23-ல் கூறுகிறது. இது ஒரு வருடத்தின் நாட்களின் எண்ணாகும். ஒரு வருஷம் மற்றும் ஏனோக்கின் வாழ்க்கைக்கு இடையேயுள்ள சதவிகிதம் ஒரு நாளுக்கும் ஒரு வருஷத்திற்கும் இடையில் காணப்படுகிறது. இந்த அடிப்படையான அளவுகோல் வேதத்திலுள்ள பல காலக்கணக்கு தீர்க்கதரிசனங்களை விவரிக்க உதவுகிறது (எசே. 4:6).

அப். 3:21 பொருத்தவரையில், இளைப் பாறுதலின் காலம் இனி வரக்கூடியதாய் இருக்கிறது. "உலகம் தோன்றினதிலிருந்து பரிசுத்த

கடிந்துகொள்ளப்படுகிறார்கள். நியாயத்தீர்ப்பின் நாளிலே சகலமும் சீர்ப்பொருந்தப்படும். ஆனால், நீதியை கற்றுக்கொள்வதற்காக பாவிகள் முதலில் தங்கள் பாவங்களை உணர வேண்டும்.

நம்மோடுகூட இம்மை வாழ்விற்குரிய ஜனங்கள் இருப்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து இவர்கள் மத்தியில் நாம் ஜெபித்து நம்முடைய மகா பரிசுத்தமான விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். நம்முடைய ஆண்டவர் இயேசுவினிடத்திலிருந்து இரக்கத்தைப் பெற வேண்டும் என்று விரும்பும் நாம் மற்றவர்களிடம் இரக்கம் காண்பிக்க வேண்டும். "அல்லாமலும், நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து, மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்." (யூதா 22-23) இங்கு மூன்று காரியங்கள் கொடுக்கப்படுகிறது. (1) சோதனையில் போராடிக் கொண்டிருப்பவர்கள் மேல் நாம் நிச்சயமாக இரக்கம் பாராட்ட வேண்டும். (2) கிறிஸ்துவுக்குள் ஒருவர் பாவம் செய்ய நேரிட்டால் கூடுமானவரையில் அதை மேற்கொள்ளுவதற்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். (3) ஒருவர் பாவம் செய்துவிட்டால் நாம் இரக்கம் பாராட்ட வேண்டும். ஆனால், பயத்தோடுகூட நாமும் சோதனையில் விழாதபடிக்கு எச்சரிப்போடு நடந்துகொள்ள வேண்டும். "தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக." (யூதா 25).

செலுத்துவதில் அச்சுறுத்தல்கள், தொலைப்பேசி ஒற்றுக் கேட்டல் போன்ற அரசியல் ஊழல்களின் மூலம் அமெரிக்கா இனிவரும் காலங்களில் தலைமைப் பொறுப்பை வகிக்கும் என்ற கண்ணோட்டம் மாறிவருகின்றது. வல்லரசு நாட்டிற்குரிய தகுதியை ஏற்கெனவே சீனா சவாலாக ஏற்றுக்கொண்டு செயல்படுகிறது. மேலும், மற்ற BRICS நாடுகளும் பொருளாதார நன்மதிப்பில் முன்னேறிக் கொண்டே வருகிறது. இனிவரும் பொருளாதார இராஜ்யத்தை எந்த நாடு அல்லது நாடுகள் ஆக்கிரமிக்கும் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

### இப்பொழுது இருப்பதைவிட 2030-ல் நடக்கப்போகும் சில மாற்றங்கள்

நடுத்தர வர்க்கத்தினர் வளரப்போகிறார்கள்.கணிக்க முடியாது மற்றும் மிகப் பரந்த அளவில் பரவப்போகும் முதிர்ச்சி.கிழக்கு மற்றும் தெற்கு நாடுகளுக்கு மாறப்போகும் பொருளாதார ஆட்சி.உணவு மற்றும் நீரினால் ஏற்படப் போகும் அழுத்தங்கள்.

இந்த அரை நூற்றாண்டாக வளர்ச்சியுற்ற நாடுகளில் மதம் என்பது, சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே போகிறது. இன்னும் சில முதியவர்கள் மட்டுமே முறைப்படி ஆலயத்திற்குச் செல்கின்றனர். பிரிட்டனில், 1968-ல் 77% இருந்த கடவுள் நம்பிக்கை இப்பொழுது 50% குறைந்துள்ளது. மதம் தங்கள் வாழ்வில் முக்கியமான ஒன்று என்று அமெரிக்காவின் சிறிதளவு பெரும்பான்மையினரே கருதுகின்றார்கள். உலகில் இஸ்லாம் மிக விரைவில் வளர்ந்து கொண்டு போனாலும், அதனால் பொருளாதார முன்னேற்றம் தீவிரம் அடைவதில்லை. எடுத்துக்காட்டாக, மதசார்பற்ற ஷா என்பவரை வெளியேற்றிவிட்டு, மும்முரமாக மதம் சார்ந்த அரசாங்கமாக ஈரான் தன்னையே மாற்றிக்கொண்டாலும், இன்று ஈரான் சமுதாயத்தில் நிகழ்ந்துவரும் உள்நாட்டு நெருக்கடிகள் ஈரானின் ஆட்சியை ஒடுக்கிக்கொண்டிருக்கிறது. அதிலும், முக்கியமாக அங்கு நிலவும் பெண்களின் நிலைமை.

### திறமையற்ற உலக அமைப்புகள்

கடந்த 50 வருடங்களாக உலக ஜனத்தொகையின் கருத்துக்கள் மாறிவிட்டன. 1972-ல் எழுதப்பட்ட ஒரு நூலான "The Limits to Growth" பல சூழ்நிலை அமைப்புகள் உலகத்திற்கு எதிராக பல பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளது. உலக ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டே போனால் உணவு உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்படும், பொருட்களின் தேவைகள் அதிகரித்துக் கொண்டே போனால் கிடைக்கும் பொருட்களில் குறைவுகள் ஏற்படும். உற்பத்தி அதிகரித்தால் அதனால் மாசுபடுதல் அதிகரிக்கும். அதன்விளைவாக உலகின் வெப்பநிலை அதிகரித்துக்கொண்டே போகும் என்று அந்த நூல் எச்சரிப்புவிடுக்கிறது. மேற்கூறப்பட்டவைகளை ஒரு முடிவிற்குக் கொண்டுவர இன்றைய மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் பல குறிப்பிடத்தக்க அடிகளை எடுத்து வைத்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, 20-ம் நூற்றாண்டில் உலகளவில் ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் 32% திகழ்ந்தது. தற்சமயம் அது 11% குறைந்துள்ளது. இதைப்போன்ற பெரிய அளவிலான பிரச்சனைகள் முடிவிற்கு வந்தாலும் அன்றாட வாழ்விற்குரிய சிறுசிறு பிரச்சனைகளை சமாளிப்பது ஒரு புதிராகவே உள்ளது.

- மதத்தில் குறைந்த அளவே நம்பிக்கைக்கொண்ட நாட்டில் தான் 70% மக்கள் தொகை வாழ்கின்றனர்.
- 100 கோடி மக்களுக்கு தேவைக்கேற்ற குடித்தண்ணீர் இல்லை. மேலும், 300 கோடி மக்கள் அடிப்படை துப்புரவு சுகாதாரமின்றி வாழ்கின்றனர்.
- 100 கோடி பெரியவர்களுக்கு எழுதப்படிக்க தெரியாது. 80% மக்கள் தொகையினர் ஒரு நாளைக்கு 10 டாலர் மட்டுமே வருமானமாய் உள்ளது. மேலும் 40% மக்களுக்கு உலகின் வருமானத்திற்கு 5% மட்டுமே வருமானமாய் உள்ளது.